**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 31** **நாள்: 05.03.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் நம்ம சென்னை என்ற புதிய செயலி (Mobile App) தற்போது iOS (iPhone) என்ற மென்பொருள் மூலமாகவும் இச்செயலியை பதவிறக்கம் செய்து, புகார்களை பதிவு செய்யலாம்.**

பொதுமக்கள் கருத்து தெரிவிக்கும் வண்ணம் நம்ம சென்னை என்ற புதிய செயலி (Namma Chennai App) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களால் 23.01.2018 துவக்கி வைக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட செயலியானது Android கைபேசி உபயோகிப்பாளர்களுக்கு பயன்படும் வண்ணம் வசதி செய்யப்பட்டு, நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கைபேசி உபயோகிப்பாளர்களால் பதிவிறக்கம் செய்துள்ளனர். தற்போது iOS (iPhone) பயன்பாட்டாளர்களும் பதிவிறக்கம் செய்யும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கைபேசி செயலி (Namma Chennai App) மூலமாக பெறப்படும் மனுக்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு, அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கை விவரங்களை மனுதாரருக்கு கைபேசி செயலி மூலமாகவே உடனுக்குடன் தெரிவிக்கும் வண்ணம் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களின் குறைகள் எவ்வித காலதாமதமின்றி உடனடியாக நிறைவேற்றப்படுகிறது.

உதாரணமாக, தெருவிளக்கு பராமரிப்பு, குப்பை அகற்றுதல், நாய் தொல்லை, சாலைப்பணிகள் பராமரிப்பு, மழைநீர் வடிகால் பராமரிப்பு போன்ற பொதுமக்களின் புகார்கள் கைபேசி செயலி மூலமாக பதியப்பட்டு, புகார்கள் அனைத்தும் எல்லைக்குட்பட்ட துறை சார்ந்த அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று பொதுமக்களின் குறைகள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தற்போது நம்ம சென்னை செயலி மூலமாக பெறப்பட்ட மொத்த புகார்கள் 1191 பதிவு செய்யப்பட்டு, 1138 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இச்செயலியை 4221 கைபேசி பயன்பாட்டாளர்கள் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**